8. இதற்காக தேவையான விண்ணப்பங்கள் மற்றும் கிராம பட்டியல்கள்/ கிராம அலுவலர் பிரிவுகள் உள்ளடங்கிய "இணைப்பு 1" உரிய மாவட்டத்தின் மாவட்டச் செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்தில் மற்றும் உரிய காணி மற்றும் மாவட்டப் பதிவகத்தில் அல்லது பிரதேச செயலகத்தில் பெற்றுக்கொள்ள இயலும். விண்ணப்பம் பதிவாளர் நாயகம் திணைக்களத்தின் வெப் தளத்திலும் (www.rgd.gov.lk) பெற்றுக்கொள்ள இயலும்.

9. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் 2024, சனவரி மாதம் 08 ஆந் திகதி அல்லது அதற்கு முன்பு அட்டவணையில் குறிப்பிடப்பட்ட முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும்.

டபிள்யூ. ஆர். ஏ. என். எஸ். விஜயசிங்க,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2023, நவெம்பர் 22.

**அட்டவணை**

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | விண்ணப்பம் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பம் அனுப்பப்பட வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| அநுராதபுரம் | தலாவ | நுவரகம் பலாத்த பிரிவின் கடியாவ பிரதேச முஸ்லிம் விவாகப் பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், அநுராதபுரம். |
| அநுராதபுரம் | ரம்பேவ | நுவரகம் பலாத்த பிரிவின் முஸ்லிம் விவாகப் பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், அநுராதபுரம். |
| அநுராதபுரம் | கல்நேவ | களாகம் பலாத்த-நேகம்பஹா பிரிவின் முஸ்லிம் விவாகப் பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், அநுராதபுரம். |

12-264

---

**இலங்கைப் பாராளுமன்றம்**

பாராளுமன்றச் செயலாளர் நாயகத்தின் பணியாட்டொகுதியில் உள்ள உதவிப் படைக்கலைச்சேவிதர் பதவிக்கு நல்ல தேகாரோக்கியமும் நல்லொழுக்கமும் உடைய இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

இந்த அறிவித்தலின் இறுதியில் தரப்பட்டுள்ள மாதிரிப் படிவத்திற்கு அமைய தயாரித்த விண்ணப்பங்கள், கல்வித் தகைமை/ உயர் கல்வித் தகைமை மற்றும் அனுபவ சான்றிதழ்களின் பிரதிகளுடன் 2023, திசெம்பர் மாதம் 22 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடிய வகையில் "பாராளுமன்றச் செயலாளர் நாயகம், இலங்கைப் பாராளுமன்றம், ஸ்ரீ ஜயவர்த்தனபுர கோட்டே" எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும். விண்ணப்பிக்கப்படும் பதவி விண்ணப்பத்தை தாங்கி வரும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் குறிப்பிடப்படுதல் வேண்டும். (இந்த அறிவித்தல் வெற்றிடங்கள் தொடர்பான விபரங்களை www.parliament.lk எனும் இணையத் தளத்திலும் பெற்றுக் கொள்ளலாம்.)

1. **சம்பள அளவுத்திட்டம் :**

   2016.11.07 ஆந் திகதிய 06/2016 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையின் அட்டவணை I இற்கு இணங்க இந்தப் பதவிக்கு உரித்துடைய மாதாந்த சம்பள அளவுத்திட்டம் ரூ. 58,295-3×1,335-8×1,630-2×2,170 - ரூபா 79,680.00 (சகல மேலதிகக் கொடுப்பனவுகளும் உட்பட இந்த சம்பள அளவுத்திட்டத்திற்குரிய ஆகக் குறைந்த ஆரம்ப சராசரி மாதாந்த சம்பளம் ரூ. 128,000) ஆகும்.

2. **வயதெல்லை:**

   விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியன்று 22 வயதுக்கு குறையாமலும் மற்றும் 40 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

3. **கல்வித் தகைமைகள்:**

   பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு (UGC) அங்கீகரித்த ஒரு பல்கலைக்கழகத்திலிருந்து அல்லது வேறொரு நிறுவனத்திலிருந்து பட்டத்தை பெற்றிருத்தல்.

4. **அனுபவம்:**

   ஒவ்வொரு விண்ணப்பதாரரும் இலங்கையின் ஆயுதப் படையில் (நிரந்தர) அல்லது இலங்கை பொலிஸ் சேவையில் 8 வருடங்களுக்கு குறையாத மதிக்கத்தக்க ஒரு சேவை காலத்தை உடைய இலங்கையின் இராணுவத்தில் கெப்டன்/ இலங்கை கடற்படையில் லெப்டினன்ட்/ இலங்கை விமானப்படையில் விமான லெப்டினன்ட் பதவியை அல்லது இலங்கை பொலிசில் உதவி பொலிஸ் அத்தியட்சகர் அல்லது அதற்கு சமமான அல்லது அதற்கு குறையாத பதவியை வகித்தவராக இருத்தல் வேண்டும்.

5. **ஆட்சேர்ப்பு நடைமுறை:**

   எழுத்துமூலப் பரீட்சை மற்றும் நேர்முகப் பரீட்சை ஆகியவற்றின் மூலம் ஆட்சேர்த்துக் கொள்ளப்படுவார்கள்.

6. **சேவை நியதிகளும் நிபந்தனைகளும்:**

   (i) இந்தப் பதவி நிரந்தரமானது. இந்தப் பதவிக்கான ஓய்வூதிய சம்பளம் தொடர்பாக அரசாங்கம் எதிர்காலத்தில் எடுக்கும் கொள்கை ரீதியான தீர்மானத்திற்கு விண்ணப்பதாரர்கள் உடன்படுதல் வேண்டும். தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரர் முதலில் மூன்று (03) வருட தகுதிகாண் கால அடிப்படையில் நியமிக்கப்படுவார். அரசாங்க சேவையில் / மாகாண அரசாங்க சேவையில் நிரந்தரமாக்கப்பட்டுள்ள எவரேனும் நபர் ஒருவர் தெரிவு செய்யப்பட்டால் அத்தகைய நபர் ஒரு வருட பதில் கடமை கால அடிப்படையில் நியமிக்கப்படுவார்.

   (ii) தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரர் பாராளுமன்ற செயலாளர் நாயகத்தின் பணியாட்டொகுதிக்கு ஏற்புடைய நிதி மற்றும் திணைக்கள ஒழுங்குவிதிகளுக்கு இயைந்தொழுக வேண்டும்.

   (iii) தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரர் அநாதைகள், விதவைகள்/ தபுதாரர் ஓய்வூதிய நிதியத்திற்கு அவரது சம்பளத்திலிருந்து அரசாங்கம் தீர்மானிக்கும் விகிதாசாரத்தில் ஒரு பங்களிப்பு தொகையை செலுத்த வேண்டும்.

   (iv) தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரர் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படுத்தப்படுவார்கள்.

   (v) தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரர் நியமிக்கப்படுவதற்கு முன்னர் அவர் பற்றிய பாதுகாப்பு சான்றறிக்கைகள் பெற்றுக் கொள்ளப்படும்.

7. கீழே குறிப்பிடப்பட்டுள்ள சான்றிதழ்களின் பிரதிகளை (மூலப்பிரதிகளல்ல) விண்ணப்பதாரர்கள் தமது விண்ணப்பங்களுடன் இணைத்து அனுப்புதல் வேண்டும். சமர்ப்பிக்குமாறு கேட்கப்படும் பட்சத்தில் அத்தகைய சான்றிதழ்களின் மூலப்பிரதிகளை சமர்ப்பித்தல் வேண்டும்:

   (அ) பிறப்புச் சான்றிதழ் ;
   (ஆ) கல்வித் தகைமை சான்றிதழ்கள் ;
   (இ) அனுபவ சான்றிதழ்கள்.

8. விண்ணப்பதாரர்கள் தமது விண்ணப்பங்களை அந்தந்த முப்படைகளின்/ பொலிஸ் சேவையின் தலைவர்களின் ஊடாக அனுப்பி வைத்தல் வேண்டும்.

9. ஏதேனும் வழிகளில் செல்வாக்குகளை பிரயோகிப்பது இந்த பதவிக்கான தகைமையை இழக்கச் செய்யலாம்.

10. விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஏதேனுமொரு விடயம் தவறானதென்பது ஒருவரைத் தெரிவுசெய்ய முன்னர் கண்டறியப்படுமிடத்து அவர் தகுதியற்றவரெனக் குறிப்பிடப்படுவதற்கும், நியமிக்கப்பட்ட பின்னர் அவ்வாறு கண்டறியப்படுமிடத்து பதவி நீக்கம் செய்யப்படுவதற்கும் காரணமாக அமையும்.

11. விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு பின்னர் கிடைக்கப் பெறும் அல்லது மேற்குறித்த சான்றிதழ்களின் பிரதிகள் இல்லாமல் அனுப்பப்படும் அல்லது அந்தந்த முப்படைகளின்/ பொலிஸ் சேவையின் தலைவர்களின் ஊடாக அனுப்பப்படாத அல்லது விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு பின்னர் அல்லது மாதிரிப்படிவத்திற்கு அமையத் தயாரிக்கப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

குசானி ரோஹனதீர,
பாராளுமன்றச் செயலாளர் நாயகம்.

இலங்கைப் பாராளுமன்றம்,
ஸ்ரீ ஜயவர்த்தனபுர கோட்டே,
2023, திசெம்பர் 05.

**இலங்கைப் பாராளுமன்றம்**

மாதிரி விண்ணப்பப்படிவம்

உதவிப் படைக்கலச் சேவிதர் பதவி

01. (அ) முதலெழுத்துக்களுடன் பெயர் (தமிழில்): ..............................

(ஆ) முதலெழுத்துக்களால் குறிக்கப்படும் பெயர்கள் (தமிழில்): ..............................
..............................

(இ) முழுப் பெயர் (ஆங்கில கெப்பிற்றல் எழுத்துக்களில்): ..............................
..............................

02. தேசிய ஆளடையாள அட்டை இலக்கம்: □□□□□□□□□□□□

03. (அ) தனிப்பட்ட முகவரி:.. ..............................
..............................
..............................

தொலைபேசி இலக்கம்: □□□□□□□□□□

(ஆ) அலுவலக முகவரி: ..............................
..............................

தொலைபேசி இலக்கம்: □□□□□□□□□□

(இ) பரீட்சைக்கான அனுமதி அட்டையை அனுப்பி வைக்க வேண்டிய முகவரி

தனிப்பட்ட : □ அலுவலக : □

04. (அ) பிறந்த திகதி: ..............................
(பிறப்புச் சான்றிதழின் ஒரு பிரதி இணைக்கப்படுதல் வேண்டும்)

(ஆ) விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியன்று வயது:
வருடங்கள்: ........ மாதங்கள்: ........ நாட்கள்: ..........

05. விவாகமானவரா/விவாகமாகாதவரா என்ற விபரம்?: (விவாகமானவர்/விவாகமாகாதவர்)

06. பால் : (ஆண்/பெண்)

07. இலங்கைப் பிரசையா எனும் விபரம் : (ஆம்/இல்லை)

08. கல்வித் தகைமைகள்: (சான்றிதழ்களின் பிரதிகள் இணைக்கப்படுதல் வேண்டும்)

க. பொ. த. (சா./த.) ஆண்டு :........................

| பாடம் | பெற்ற சித்திகள் | ஆண்டு |
|---|---|---|
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |

க. பொ. த. (உ./த.) ஆண்டு :........................

| பாடம் | பெற்ற சித்திகள் | ஆண்டு |
|---|---|---|
| | | |
| | | |
| | | |
| | | |

09. உயர் கல்வித் தகைமைகள் (சான்றிதழ்களின் பிரதிகள் இணைக்கப்படுதல் வேண்டும்) :

பல்கலைக்கழகம் : ..........................................................................................................................

பட்டம் : ..........................................................................................................................

ஆண்டு : ..........................................................................................................................

10. அனுபவம் (சான்றிதழ்களின் பிரதிகள் இணைக்கப்படுதல் வேண்டும்) :

| நிறுவனம் | பதவி | சேவைக் காலம் |
|---|---|---|
| | | |
| | | |

11. தற்போதைய தொழில் பற்றிய விபரம்:

(அ) நிறுவனத்தின் பெயரும் முகவரியும் : ..........................................................................................

(ஆ) முதல் நியமனத் திகதி : ..........................................................................................

(இ) தற்போது வகிக்கும் பதவி : ..........................................................................................

(ஈ) மாதாந்த அடிப்படை சம்பளம் : ..........................................................................................

(உ) கொடுப்பனவுகள் : ..........................................................................................

(ஊ) முழு மொத்த சம்பளம் : ..........................................................................................

12. நீர் ஏதேனும் குற்றச்செயல் தொடர்பில் நீதிமன்றத்தில் குற்றவாளியாகக் காணப்பட்டுள்ளீரா? (ஆம்/இல்லை)
அவ்வாறாயின் அது பற்றிய விபரங்களைக் குறிப்பிடுக:
..........................................................................................................................
..........................................................................................................................

13. நீர் இதற்கு முன்னர் அரசாங்க சேவையில் பணியாற்றியுள்ளீரா? (ஆம்/இல்லை)
எனின் அது பற்றிய விபரங்களைக் குறிப்பிடுக:
..........................................................................................................................
..........................................................................................................................

என்னால் இந்த விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விபரங்கள் யாவும் உண்மையானவை மற்றும் சரியானவை என உறுதியளிக்கின்றேன். இதில் தரப்பட்டுள்ள விபரங்கள் பொய்யானவை என நான் தெரிவு செய்யப்படுவதற்கு முன்னர் கண்டுபிடிக்கப்பட்டால் இப்பதவிக்கு நான் தகுதியற்றவனாவேன் என்பதையும் தெரிவு செய்யப்பட்டதன் பின்னர் கண்டுபிடிக்கப்பட்டால் எதுவித நட்டஈடுகளுமின்றி சேவையிலிருந்து நீக்கப்படுவேன் என்பதையும் நன்கறிவேன்.

..........................................
திகதி:.................. விண்ணப்பதாரரின் கையொப்பம்

---

**திணைக்கள /நிறுவனத் தலைவரின் சான்றிதழ்**

பாராளுமன்ற செயலாளர் நாயகம் அவர்கட்கு,

இந்நிறுவனத்தில் ..........................................................................................................................
பதவியை வகிக்கும் திரு./திருமதி/செல்வி ..........................................................................................
..... அவர்களின் விண்ணப்பத்தை சிபாரிசு செய்து சமர்ப்பிக்கின்றேன். இவர் இந்தப் பதவியில் நிரந்தரமாக்கப்பட்டுள்ளார்/ நிரந்தரமாக்கப்படவில்லை எனவும், இவரது வேலையும் மற்றும் நடத்தையும் திருப்திகரமானது எனவும் இவருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கைகள் ஏதுமில்லை எனவும் மற்றும் ஒழுக்காற்று நடவடிக்கைகள் எதனையும் மேற்கொள்ளும் அபிப்பிராயமில்லை எனவும் நான் சான்றுப்படுத்துகின்றேன். இப்பதவிக்கு இவர் தெரிவு செய்யப்பட்டால், சேவையிலிருந்து விடுவிக்கப்படுவார். (தயவுசெய்து பொருத்தமற்ற சொற்களை கீறிவிடவும்).

..........................................................................
திணைக்கள/நிறுவனத் தலைவரின் கையொப்பம்
(பதவி முத்திரை)

திகதி:.....................
12-325

---

**தேசிய பெருந்தோட்ட முகாமைத்துவ நிறுவனம்**

கமத்தொழில் மற்றும் பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சு

இந்த நிறுவனத்தின் பின்வரும் பதவிக்கு தகுதியான இலங்கையர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது.

01. முகாமைத்துவ உதவியாளர் பதவி (தொழில்நுட்பம் சாராத) - MA 1.1 (தரம் III)

**தகைமைகள்** : **வெளியக விண்ணப்பதாரர்களுக்கு**

க.பொ.த (சா/த) பரீட்சையில் சிங்களம்/தமிழ் மொழி, கணிதம் மற்றும் ஆங்கில மொழி உட்பட நான்கு பாடங்களுக்கான திறமைச் சித்தியுடன் ஆறு பாடங்களில் சித்தியடைந்திருத்தல்

**மற்றும்**

க.பொ.த (உ/த) பரீட்சையில் ஆகக்குறைந்தது மூன்று பாடங்களில் (பொது சாதாரண பரீட்சை தவிர்ந்த) சித்தியடைந்திருத்தல்.

**உள்ளக விண்ணப்பதாரர்களுக்கு**

க.பொ.த (சா/த) பரீட்சையில் சிங்களம்/தமிழ் மொழி மற்றும் கணிதம் உட்பட நான்கு பாடங்களுக்கான திறமைச் சித்திகளுடன் ஆறு பாடங்களில் சித்தியடைந்திருத்தல்.

**மற்றும்**

முதன்மை நிலை - திறமை அல்லது திறமையற்ற பணியாளர் பிரிவின் கீழ் நிரந்தர பதவியில் குறைந்தபட்சம் ஐந்து ஆண்டுகள் சேவை அனுபவம்

**சம்பள அளவுத்திட்டம்** : MA 1.1 - ரூபா 27,910.00 -10×300 - 7×350-4×495- 20×660- ரூபா 48,540.00 (ஆரம்பத்தில் சம்பளம் ரூபா 27,910.00 மற்றும் அரசினால் அங்கீகரிக்கப்பட்ட பிற கொடுப்பனவுகள்)

**வயதெல்லை** : 18 வயதுக்கு குறையாதவராகவும் 45 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். உள்ளக விண்ணப்பதாரர்களுக்கு அதிகபட்ச வயதெல்லை பொருந்தாது.

**ஆட்சேர்ப்பு முறை** : எழுத்துமூல போட்டிப்பரீட்சை மற்றும்/அல்லது தொழிற்தேர்ச்சி பெற்ற நேர்முகத்தேர்வு குழுவொன்றினால் நடாத்தப்படுகின்ற கட்டமைப்பு நேர்முகத்தேர்வின் மூலம்

**வேறு பிரதிபலன்கள் :**

- ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியம் என்பவற்றிற்கு முறையே 12% மற்றும் 3% பங்களிப்பு நிறுவனத்தினால் செய்யப்படும். (ஊழியர் சேமலாப நிதியத்திற்கு ஊழியர் பங்களிப்பு அடிப்படை சம்பளத்தில் 10%)
- உறுப்பினர் மற்றும் அவரது நெருங்கிய குடும்ப உறுப்பினர்களுக்கான பங்களிப்பு மருத்துவக் காப்பீட்டுத் திட்டம்
- அருகிலுள்ள நகரத்திற்கு போக்குவரத்து வசதி (கடுவலை/கொட்டாவ)

**விண்ணப்பிக்கும் முறை :**

உறவினர் அல்லாத இரு பரிந்துரையாளர்களின் பெயர் மற்றும் விலாசத்தை கொண்ட உங்களது முழுமையான உயிர் தரவு குறிப்பு மற்றும் தொடர்புடைய சான்றிதழ்களின் நகல்களுடன் பதிவுத் தபாலில் கீழுள்ள முகவரிக்கு 2023 டிசம்பர் 18 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்க கூடியவாறு அனுப்பி வைக்க வேண்டும். அரசாங்க சேவையிலுள்ள விண்ணப்பதாரிகள் நிறுவன தலைவரின் ஊடாக விண்ணப்பப்படிவத்தை அனுப்ப வேண்டும். விண்ணப்பப்படிவம் அனுப்பும் தபால் உறையின் இடது மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியை குறிப்பிட வேண்டும். எச்சந்தர்ப்பத்திலேனும் முழுமையற்ற மற்றும் தாமதமான விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்படாது.

பணிப்பாளர்/பிரதம நிறைவேற்று அதிகாரி
தேசிய பெருந்தோட்ட முகாமைத்துவ நிறுவனம்,
எம்.டி.எச் ஜயவர்தன மாவத்தை,
அத்துருகிரிய.
தொலைபேசி 011-2770232
12-332/1

---

**தேசிய பெருந்தோட்ட முகாமைத்துவ நிறுவனம்**

கமத்தொழில் மற்றும் பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சு

ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்தல்

இந்நிறுவனத்தின் கீழுள்ள பதவிகளுக்காக தகுதியுடைய இலங்கையர்களிடமிருந்து ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்வதற்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. **பயிற்சியளித்தல் நிபுணர் (பெருந்தோட்ட முகாமைத்துவம்)** MM 1.1 (தரம் II )

**தொழில் விபரம்** : விடயத்திற்குரிய விரிவுரைகளை நடாத்துதல், கைத்தொழில் பயிற்சியின் தேவைப்பாட்டை மதிப்பீடு செய்தல், செயற்றிட்டங்கள்/பாடநெறிகளை தயாரித்தலும் மேம்படுத்தலும், பொருத்தமான பயிற்சி செயற்றிட்டங்கள்/ பாடநெறிகளை திட்டமிடலும் நடாத்துதலும், பயிற்சி பாடநெறிகளின் செயற்றிறனை மதிப்பீடு செய்வதற்கு நடைமுறைகள் மற்றும் நுட்பங்களை மேம்படுத்தல், நிறுவனத்தின் பாடநெறி/செயற்றிட்டங்களின் முகாமைத்துவ திறனை அதிகரிப்பதற்கு புதிய தொழில்நுட்ப முறைகளை நடைமுறைப்படுத்தல்.

**தகைமைகள்** : விவசாயம்/விவசாய அறிவியல்/விவசாய தொழில்நுட்பம்/விவசாய வணிக முகாமைத்துவம்/ பெருந்தோட்ட அறுவடை தொழில்நுட்பம் (விவசாயத்தில் சிறப்பு பொருளாதாரம்) அல்லது பல்கலைகழக மானிய ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட வேறு ஏதேனும் தொடர்புடைய பட்டமொன்று குறைந்தபட்சம் ஒரு (01) வருடகாலம் கூட்டுதாபனம்/சபை அல்லது நிறுவனமொன்றில் பதவிக்குரிய தகுதியான அனுபவம்

**சம்பள அளவுத் திட்டம்** : ரூபா 53,175.00 மற்றும் அரசினால் அங்கீகரிக்கப்பட்ட ஏனைய கொடுப்பனவுகளுக்கு உரிமையுடையவர்கள்.

**வயதெல்லை** : 22 வயதுக்கு குறையாதவராகவும் 45 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்

2. **உதவிப் பணிப்பாளர் (சந்தைப்படுத்தல், வியாபார மேம்படுத்தல் மற்றும் திட்டமிடல்)** MM 1.1 **(தரம் II)**

**தொழில் விபரம்** : பயிற்சி செயற்றிட்டங்கள்/பாடநெறிகள் மற்றும் ஏனைய சேவைகளின் மேம்படுத்தல் திட்டமிடல் மற்றும் முகாமைத்துவம் செய்தல், சந்தை ஆராய்ச்சி கற்கைகளை ஆரம்பித்தல் மற்றும் கைத்தொழிலின் நுகர்வு மற்றும் சந்தை வாய்ப்பை புரிந்து கொள்வதற்காக தொழிற்சந்தையை பகுப்பாய்வு செய்தல், சமகால தேவைகளை கண்டறிந்து அதன் மூலம் செயற்றிட்டங்கள்/பாடநெறிகளை மேம்படுத்துவதற்காக முகாமைத்துவத்திற்கு ஒத்தாசை வழங்கல், சேவை பெறுநர்களுக்கு பயிற்சி செயற்றிட்டங்கள்/பாடநெறிகள் அல்லது சேவையை தொடர்பாடல் செய்தல், தாபினர்களுக்கிடையே தொழில் நிபுணத்துவத்தை பராமரித்தல், தொழில் நிபுணத்துவத்தை நடாத்திச் செல்லல் மற்றும் மேம்படுத்துவதற்கான திறன் கூட்டங்கள், கல்விச்சார் கருத்தரங்குகள் மற்றும் ஆலோசனை பயிற்சி செயலமர்வுகளுக்கு பங்குபற்றல், வியாபார திட்டமிடல் பகுப்பாய்வு மற்றும் அபிவிருத்தி, சந்தைப்படுத்தல் உபாயமுறை மற்றும் நிறுவன திட்டமிடல், செயற்றிட்ட திட்டமிடல், கணிப்புகள், பாதீடு, நிதி மற்றும் கால அட்டவணை வெளியீடு உள்ளிட்ட திட்டமிடல்

மற்றும் விற்பனை மற்றும் சந்தை நோக்கத்தை நிலையான அடிப்படையில் அடையக் கூடிய வகையில் கோரிக்கைகளுக்கமைய செயற்றிட்டங்களுக்கு முன்னுரிமையளித்தல், கல்வி மற்றும் பயிற்சியளித்தல் தாக்க மதிப்பீடுகள், வெளியீட்டு செயற்பாட்டு திட்டம், பயிற்சி பாதீடு தயாரித்தல், வருடாந்த அறிக்கைக்காக செயலாற்று மீளாய்வு அறிக்கை மற்றும் பயிற்சி கூறுகள், நிறுவனத்தின் பிராந்திய கல்விசார் ஆளணி மற்றும் நிறுவனத்தின் தொழில்முறை உறுப்புரிமை மற்றும் ஏனைய கல்விசார் செயற்பாடுகளும் அதனோடு தொடர்புடைய வெளி அமைப்புகளுடன் தொடர்பிணை பேனுதல்.

**தகைமைகள்** : அங்கீகரிப்பட்ட பல்கலைகழகமொன்றில் பெற்றுக்கொண்ட சந்தைப்படுத்தல் முகாமைத்துவம்/வியாபார முகாமைத்துவம்/வியாபார நிர்வாகம்/வணிகவியல் அல்லது பல்கலைகழக மானிய ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட வேறு ஏதேனும் தொடர்புடைய பட்டமொன்று குறைந்தபட்சம் ஒரு (01) வருடகாலம் கூட்டுதாபனம்/சபை அல்லது நிறுவனமொன்றில் பதவிக்குரிய தகுதியான அனுபவம்

**சம்பள அளவுத் திட்டம்** : ரூபா 53,175.00 மற்றும் அரசினால் அங்கீகரிக்கப்பட்ட ஏனைய கொடுப்பனவுகளுக்கு உரிமையுடைவர்கள்.

**வயதெல்லை** : 22 வயதுக்கு குறையாதவராகவும் 45 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.

3. **பயிற்சியளித்தல் உத்தியோகத்தர் (பெருந்தோட்ட பொறியியல்) JM 1.1 (தரம் II)**

**தொழில் விபரம்** : விடயத்திற்குரிய விரிவுரைகளை நடாத்துதல், பயிற்சியளித்தல் நிபுணருக்கு வழங்கப்பட்டுள்ள கடமைகளை மேற்கொள்ள பயிற்சியளித்தல் நிபுணருக்கு உதவி செய்தல், பயிற்சியளித்தல் நிபுணரின் வழிகாட்டலுக்கமைய பயிற்சி பாடநெறிகள் மற்றும் கைந்நூல் திட்டமிடல், கைத்தொழிலுக்கு பொருத்தமான பயிற்சி செயற்றிட்டங்கள்/பாடநெறி திட்டமிடல், ஒருங்கிணைப்பு நடவடிக்கை மற்றும் செயற்படுத்தல், கல்வியியல் தாக்க மதிப்பீடுகள் மற்றும் பயிற்சி

**தகைமைகள்** : பெருந்தோட்ட பொறியியல்/விவசாயம் (விவசாயத்தில் சிறப்பு பொருளாதாரம்)/விவசாய அறிவியல்/விவசாய தொழில்நுட்பம்/பெருந்தோட்ட அறுவடை தொழில்நுட்பம் (பெருந்தோட்ட பொறியியல் சிறப்பு) அல்லது பல்கலைகழக மானிய ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட வேறு ஏதேனும் தொடர்புடைய பட்டமொன்று

**சம்பள அளவுத் திட்டம்** : ரூபா 42,600.00 மற்றும் அரசினால் அங்கீகரிக்கப்பட்ட ஏனைய கொடுப்பனவுகளுக்கு உரிமையுடைவர்கள்.

**வயதெல்லை** : 22 வயதுக்கு குறையாதவராகவும் 45 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.

**ஆட்சேர்ப்பு முறை** : எழுத்துமூல போட்டிப்பரீட்சை மற்றும்/அல்லது தொழில் தேர்ச்சி பெற்ற நேர்முகத்தேர்வுக் குழுவொன்றினால் நடாத்தப்படுகின்ற கட்டமைப்பு நேர்முகத்தேர்வின் மூலம்

**பொதுக் காரணங்கள்** : மேற்கூறிய அனைத்து பதவிகளுக்கும் விண்ணப்பதாரர் ஆங்கில மொழியை நன்றாக கையாளக்கூடிய திறமையுடையவராகவும் கனிணி மென்பொருள் பயன்பாடு தொடர்பான அறிவும் காணப்பட வேண்டும்

மேற்கூறிய பதவிக்கு தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரிகள் குறித்த கடமைகளை நிவர்த்தியாக நிறைவேற்றுவதற்குரிய உடல் உள ரீதியாக தேர்ச்சியுடையவராகவும் சேவை தேவைக்கருதி பிரதான அலுவலகத்தில் அல்லது நாடளாவிய ரீதியில் எந்தவொரு பிரதேசத்திலும் சேவையாற்ற கட்டுப்பட்டிருக்க வேண்டும்.

**வேறு பிரதிபலன்கள்**

- ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியம் என்பவற்றிற்கு முறையே 12% மற்றும் 3 % பங்களிப்பு நிறுவனத்தினால் செய்யப்படும். (ஊழியர் சேமலாப நிதியத்திற்கு ஊழியர் பங்களிப்பு அடிப்படை சம்பளத்தில் 10%)
- அருகிலுள்ள நகரத்திற்கு போக்குவரத்து வசதி (கடுவலை/கொட்டாவ)

**விண்ணப்பிக்கும் முறை**

உறவினர் அல்லாத இரு பரிந்துரையாளர்களின் பெயர் மற்றும் விலாசத்தை கொண்ட உங்களது முழுமையான உயிர் தரவு குறிப்பு மற்றும் தொடர்புடைய சான்றிதழ்களின் நகல்களுடன் பதிவுத் தபாலில் கீழுள்ள முகவரிக்கு 2023 திசெம்பர் 18 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்க கூடியவாறு அனுப்பிவைக்க வேண்டும். அரச சேவையிலுள்ள விண்ணப்பதாரிகள் நிறுவன தலைவரின் ஊடாக விண்ணப்பப்படிவத்தை அனுப்ப வேண்டும். விண்ணப்பபடிவம் அனுப்பும் தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியை குறிப்பிட வேண்டும். எச்சந்தர்ப்பத்திலேனும் முழுமையற்ற மற்றும் தாமதமான விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்படாது.

**கவனத்திற் கொள்க**

- மிகவும் தகுதியான விண்ணப்பதாரர்கள் மாத்திரம் நேர்முக தேர்வினை முகம் கொடுக்க தகைமையை பெற்றுக்கொள்வார்கள்.
- இவ் அறிவித்தல் www.nipm.gov.lk இணையத்தளத்திலும் வெளியிடப்பட்டுள்ளது.

பணிப்பாளர்/பிரதம நிறைவேற்று அதிகாரி

தேசிய பெருந்தோட்ட முகாமைத்துவ நிறுவனம்,
எம்.டி.எச் ஜயவர்தன மாவத்தை,
அத்துருகிரிய.
தொலைபேசி 011-2770232

12-332/2

## பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

**திருத்தம்**

**தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களம்**

2023.11.17 ஆந் திகதிய வர்த்தமானி அறிவித்தலை திருத்தம் செய்தல்

2023.11.17 ஆந் திகதி வெளியிடப்பட்ட இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானி இலக்கம் 2359 ஐக் கொண்ட வர்த்தமானி அறிவித்தலில் பிரசுரிக்கப்பட்ட தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களத்தின் கீழ் வருகின்ற தொழில்நுட்பவியல் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரிகளில் 2024 ஆம் ஆண்டில் மாணவர்களை சேர்த்துக் கொள்வதற்கான வர்த்தமானி அறிவித்தலில் பின்வரும் திருத்தங்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

எஸ்.சீ. ஜகத்,
பணிப்பாளர் நாயகம்.

| தொடர் இல. | பாடநெறிக் குறியீட்டு எண் | பாடநெறியின் பெயர் | திருத்தம் செய்யப்பட வேண்டிய முறை |
|---|---|---|---|
| 85 | ETB 28 | இலத்திரனியல் தொழில்நுட்பவியலில் தேசிய டிப்ளோமா<br>NVQ மட்டம் 5<br>முழு நேரம்<br>01 ½ வருடங்கள்<br>(அடிப்படை கற்கைநெறி உள்ளடங்கும்) | இந்தப் பாடநெறி 2023.11.17 ஆந் திகதியன்று வெளியிடப்பட்ட வர்த்தமானியில் இருந்து நீக்கப்பட்டுள்ளது. |
| 86 | ETA 28 | இலத்திரனியல் தொழில்நுட்பவியலில் உயர் தேசிய டிப்ளோமா | மருதானை தொழில்நுட்பவியல் கல்லூரி தற்போது நடைபெற்று வரும் கல்லூரியாக சேர்க்கப்பட்டுள்ளது. |
| 94 | ETA 22 | கடல்சார் மற்றும் ஏற்பாட்டியல் முகாமைத்துவ தொழில் நுட்பவியலில் உயர் தேசிய டிப்ளோமா | ஆட்சேர்ப்பு தகைமை<br>1. உரிய துறையில் NVQ மட்டம் 5 சான்றிதழொன்றைப் பெற்றிருத்தல்<br>2. 2023.12.15 ஆந் திகதியன்று 17 வயதுக்கு மேற்பட்டவர்களாக இருத்தல் வேண்டும். |
| 96 | BSA 01 | கணக்கியல் உயர் தேசிய டிப்ளோமா | ஆட்சேர்ப்பு தகைமை<br>1. உரிய துறையில் NVQ மட்டம் 5 சான்றிதழொன்றைப் பெற்றிருத்தல்<br>2. 2023.12.15 ஆந் திகதியன்று 17 வயதுக்கு மேற்பட்டவர்களாக இருத்தல் வேண்டும். |
| 126 | ETB 36 | விவசாய உற்பத்தித் தொழில்நுட்பவியலில் தொழில்நுட்ப தேசிய டிப்ளோமா | ஆட்சேர்ப்பு தகைமை<br>• நாற்றுமேடை அபிவிருத்தி உதவியாளர்<br>• கள உதவியாளர் (விவசாயம்)<br>• தாவர திசு தோட்ட வளர்ப்பு ஆராய்ச்சி ஆய்வக உதவியாளர்<br>• மலர் வளர்ப்பு மற்றும் இயற்கையை ரசித்தல் அபிவிருத்தி உதவியாளர்<br>மேற்குறிப்பிடப்பட்ட பாடநெறிகளுள் ஒன்றில் NVQ மட்டம் 4 சான்றிதழைப் பெற்றிருத்தல்<br>அல்லது<br>க.பொ.த. (உ.த.) உயிரியல் தொழில்நுட்பம் / பௌதீக தொழில்நுட்பம் / விஞ்ஞானம் போன்ற பாடத்துறைகளில் இருந்து ஒரே நேரத்தில் குறைந்தது மூன்று பாடங்கள் சித்தியடைந்திருத்தல். (GIT, பொது ஆங்கிலம் தவிர)<br>2. 2023.12.15ஆந் திகதியன்று 17 வயதுக்கு மேற்பட்டவர்களாக இருத்தல் வேண்டும். |
| 138 | ETA 20 | உணவு தொழில்நுட்பவியலில் உயர் தேசிய டிப்ளோமா<br>முழு நேரம்<br>1 வருடம்<br>(This course includes the subjects of Analytical Chemistry, Biotechnology, Nutrition, Quality Control, and Food Safety Management for Selection, Preservation, Processing, Packaging, Distribution and Use of Safe Food) | ஆட்சேர்ப்பு தகைமை<br>1. உரிய துறையில் NVQ மட்டம் 5 சான்றிதழொன்றைப் பெற்றிருத்தல்<br>2. 2023.12.15 ஆந் திகதியன்று 17 வயதுக்கு மேற்பட்டவர் களாக இருத்தல் வேண்டும். |

12-335

# பகுதி I : தொகுதி (IIஆ) - விளம்பரங்கள்

## கேள்விப்பத்திர அறிவித்தல்கள்

**இலங்கைப் புகையிரத சேவைகள்**

விலைமனுக் கோரல்
பெறுகை இல.: SRS/ F.7814
இரண்டு வருட காலத்துக்கு கொழும்பு - கோட்டை புகையிரத நிலையத்திலுள்ள நிரந்தரமான சிற்றுண்டிச்சாலை அலகுகள் மற்றும் நீண்டதூர புகையிரதங்களின் நடமாடும் சிற்றுண்டிச்சாலைகளை வாடகைக்கு வழங்குதல்

01. கொழும்பு - கோட்டை, புகையிரத நிலையத்திலுள்ள நிரந்தரமான சிற்றுண்டிச்சாலை அலகுகள் மற்றும் நீண்ட தூர புகையிரதங்களிலுள்ள நடமாடும் சிற்றுண்டிச்சாலைகளில் உணவு மற்றும் பானங்களை விற்பனை செய்வதற்காக உணவக சேவைத் துறையில் குறைந்தபட்சம் ஐந்து வருட கால சித்திகரமான அனுபவத்தைக் கொண்ட பொதுமக்களிடமிருந்து முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை திணைக்கள பெறுகைக் குழுவின் தலைவர் அழைக்கிறார்.

02. நிரந்தர மற்றும் நடமாடும் சிற்றுண்டிச்சாலை அலகுகள் இரண்டும் ஒற்றை அலகாக மதிப்பீடு செய்யப்பட்டு கையளிக்கப்படும்.

சமையலறை மற்றும் பேக்கரி சகிதமான நிரந்தர சிற்றுண்டிச் சாலை அலகுகள்

* கொழும்பு கோட்டையிலுள்ள 1 ஆம் மற்றும் 2 ஆம் வகுப்பு சிற்றுண்டிச்சாலை ( 03 ஆம் இலக்க மேடை)
* கொழும்பு கோட்டையிலுள்ள 3 ஆம் வகுப்பு சிற்றுண்டிச்சாலை ( 03 ஆம் இலக்க மேடை)
* இரண்டு கடலை விற்பனைக் கூடங்கள் ( 03 ஆம் இலக்க மேடை)
* சிறிய விற்பனைக் கூடங்கள் (02 மற்றும் 03 ஆம் இலக்க மேடைகள்)
* சிறிய விற்பனைக் கூடங்கள் (05 மற்றும் 06 ஆம் இலக்க மேடைகள்)
* புகையிரத நிலையத்திற்குப் பின்னாலுள்ள சிறிய விற்பனைக் கூடங்கள் (வெளியேறும் வாசலுக்குப் பக்கத்தில் -100 சதுர அடிகள்)
* சமையலறை மற்றும் பேக்கரி

நடமாடும் சிற்றுண்டிச்சாலை அலகுகள்
நீண்ட தூர சுற்று (போக வர) புகையிரதப் பயணம்

*1045/ 1046 பதுளை இரவு தபால்
*1005/ 1006 பொடி மெனிக்கே
*1015/ 1016 உடரட்ட மெனிக்கே
*6079/ 6080 மீனகயா நகர்சேர் கடுகதி
*1023/ 1024 டிகிரி மெனிக்கே
*4077/ 4078 யாழ் தேவி
*4089/ 4090 யாழ்ப்பாண இரவு தபால்
*4021/ 4022 யாழ்ப்பாண நகர் சேர் கடுகதி(A/C)
*1019/ 1020 கண்டி நகர் சேர் கடுகதி
*1029/ 1030 கண்டி நகர் சேர் கடுகதி(A/C)
*1033/ 1034 கண்டி கடுகதி

03. மீளளிக்கப்படாத ஆவணக் கட்டணமாக 10,000.00 ரூபாவை (பத்தாயிரம் ரூபா) மட்டும் செலுத்துவதன் பேரில் 2023.12.19 ஆந் திகதி பி.ப.3.00 மணி வரையில் பிரதிப் பொது முகாமையாளர் ( பெறுகைகள்) அலுவலகத்திலிருந்து பெறப்படக்கூடிய படிவங்களில் மட்டுமே விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

04. 2023.12.20 ஆந் திகதியன்று பி.ப. 2.00 மணிக்கு விலைமனுக்கள் ஏற்கும் காலம் முடிவுறும் என்பதுடன் முடிவுறுத்தல் காலம் முடிவடைந்தவுடன் கொழும்பு 10, ஒல்கொட் மாவத்தை, பிரதிப் பொது முகாமையாளர் (பெறுகைகள் ) அலுவலகத்தில் உடனடியாகத் திறக்கப்படும்.

05. விலைமனுக்கள் முடிவுறுத்தப்படும் நேரத்திற்கு ஒன்றில் முன் தலைவர், திணைக்கள பெறுகைக்குழு ( உயர் மட்டம்) , இலங்கை புகையிரத சேவைகள், பிரதிப் பொது முகாமையாளர்(பெறுகைகள்) அலுவலகம், ஒல்கொட் மாவத்தை, கொழும்பு -10 எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். அல்லது கொழும்பு 10, ஒல்கொட் மாவத்தை, பிரதிப் பொது முகாமையாளர் (பெறுகைகள்) அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள விசேட கேள்விப் பெட்டியில் உள்ளிடுவதற்கான ஏற்பாடுகளை செய்யவும்.

06. கொழும்பு 10, ஒல்கொட் மாவத்தை, பிரதிப் பொது முகாமையாளர் பெறுகைகள் அலுவலகத்தில் 2023.12.13 ஆந் திகதி மு.ப. 10.00 மணிக்கு விலைக்கோரல் முன்னோடிக் கூட்டமொன்று இடம்பெறும்.

விலைமனுக்களைச் சமர்ப்பிப்பதற்கு முன்னர் சிற்றுண்டிச் சாலைகளைப் பரீட்சித்துப் பார்ப்பதற்கு விலைமனுதாரர்களுக்கு அனுமதி வழங்கப்படும்.

07. இது தொடர்பாக பின்வரும் தொலைபேசி இலக்கத்தில் பிரதிப் பொது முகாமையாளர் (வர்த்தகம்) அவர்களைத் தொடர்புகொள்ளவும்.

தொலைபேசி இலக்கங்கள்: 011- 4600944.

08. விலைமனுக்களுடன் 2,500,000.00 (இருபத்தைந்து இலட்சம் ரூபா) ரூபாவைச் செலுத்திப் பெற்றுக் கொண்ட பற்றுச்சீட்டின் மூலப்பிரதியை இணைத்துச் சமர்ப்பித்தல் வேண்டும். விலைமனுக்கோரல் பிணை முறியானது ஒன்றில் இலங்கைப் புகையிரத சேவைகள் தலைமை கணக்காய்வாளரால் ஏற்றுக்கொள்ளக் கூடிய செல்லுபடியாகும் பண அலகாக வைத்தல் வேண்டும் அல்லது இலங்கையில் அங்கீகரிக்கப்பட்ட வங்கியின் வங்கி உத்தரவாதமாகவிருத்தல் வேண்டும். அந்த வகையில் வைக்கப்படும் வங்கி உத்தரவாதமானது ஒப்பந்தம் செய்யப்படும் 06 மாத காலத்திற்கு செல்லுபடியாகும் நிபந்தனையற்ற உத்தரவாதமாகவிருத்தல் வேண்டும்.

09. இலங்கை புகையிரத சேவையின் ஊழியர்கள் அல்லது அவர்களின் நேரடி குடும்ப அங்கத்தவர்கள் இந்த கேள்வியில் பங்குபற்றுவதற்கு தகுதியற்றவர்கள். இறுதித் தீர்மானம் எடுக்கும் உரிமையை பெறுகைக்குழு தன்னகத்தே கொண்டுள்ளது.

10. மேலதிகத் தகவல்களை ஒன்றில் பிரதிப் பொது முகாமையாளர் (பெறுகைகள்) அல்லது பிரதிப் பொது முகாமையாளர் (வர்த்தகம்) அவர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

தொடர்பிலக்கங்கள்: 011- 2438078/ 011- 2436818/ 011- 4600944.
தொலைநகல் இலக்கம்: 011-2432044.

தலைவர்,
திணைக்களத்தின் பெறுகைக் குழு (உயர் மட்டம்),
இலங்கைப் புகையிரத சேவைகள்.

12-130

---

**இலங்கைப் புகையிரத சேவைகள்**

பெறுகை அறிவித்தல்

1,500 CUBES OF TRACK BALLAST TO IPW/ KANDY & IPW/ GOMPOLA SECTIONS OF UPPER DISTRICT
PROCUREMENT NO: SRS/ F. 7939

01. தேசிய போட்டி ரீதியிலான விலைமனுக்கோரல் அடிப்படையில் பின்வரும் அமைவிடங்களுக்கு வழித்தட சிறுகற்களை வழங்குவதற்காக வழங்குநர்களிடமிருந்து இலங்கை புகையிரத சேவைகள் திணைக்கள பெறுகைக் குழுத் ( உயர் மட்டம்) தலைவர் முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை பெற்றுக் கொள்வார். இந்த விலைமனுக்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ள ஒவ்வொரு அமைவிடத்திற்கும் தனித்தனியாக மதிப்பீடு செய்யப்பட்டு ஒப்பந்தம் வழங்கப்படும்.

| அம்ச இல. | அமைவிடம் | கியூப்புக்களின் எண்ணிக்கை | ஒப்படைக்கும் காலப்பகுதி (மாதங்கள்) |
|---|---|---|---|
| 01. | கட்டுகஸ்தோட்டை திறந்த வெளி | 1,000 | 08 |
| 02. | கம்பளை திறந்தவெளி | 500 | 04 |

02. 2023.12/18 ஆந் திகதியன்று பி.ப. 3. மணி வரையும் மீளளிக்கப்படாத ஆவணக் கட்டணமாக 8, 675.00 ரூபாவை (எட்டாயிரத்து அறுநூற்றி எழுபத்தைந்து ரூபா) மாத்திரம் செலுத்திய பின்னர், பெறுகைக்கான பிரதிப் பொது முகாமையாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளக் கூடிய படிவங்களிலேயே விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

03. விலைமனுக்கள் 2023.12.19 ஆந் திகதியன்று பி.ப. 2.00 மணிக்கு மூடப்படும்.

04. விலைமனுதாரர்கள்அவர்களின் விலைமனுவின் பகுதியொன்றாக 3,30,000 ரூபாவை மாத்திரம் ( மூன்று இலட்சத்து முப்பதாயிரம் பெறுமதியான) விலைமனு பிணையொன்றை வழங்கல் வேண்டும்.

05. விலைமனுக்கள் அவைகளின் மூடும் நேரத்தின் பின்னர், பெறுகைக்கான பிரதி பொது முகாமையாளரின் அலுவலகத்தில் உடனடியாகவே திறக்கப்படும். விலைமனுதாரர் அல்லது அவர்களின் சட்டப்பூர்வமாக அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிகள் விலைமனுக்களைத் திறக்கும் வேளையில் சமூகமளிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

06. முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் ஒன்றில் கீழேயுள்ள முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பப்படல் வேண்டும் அல்லது நேரடியாகவே ஒப்படைக்கப்படல் வேண்டும்.

தலைவர்,
திணைக்கள பெறுகைக் குழு (உயர் மட்டம்),
இலங்கைப் புகையிரத சேவைகள்,
பிரதிப் பொது முகாமையாளரின் அலுவலகம் (பெறுகை),
ஒல்கொட் மாவத்தை, கொழும்பு 10, இலங்கை.

07. விலைமனுக்கள் ஆவணங்கள் பெறுகைக்கான பிரதிப் பொது முகாமையாளரின் அலுவலகத்தில் இலவசமாகப் பரீட்சிக்கலாம்.

தொலைபேசி இலக்கங்கள்: 94(11)2438078 / 94(11) 2436818.
தொலைநகல் இலக்கம்: 94(11) 2432044
மின்னஞ்சல் : srs.slr@gmail.com. tender 2@railway .gov.lk
இணையத்தளம்: www.railway.gov.lk

தலைவர்,
திணைக்களத்தின் பெறுகைக் குழு (உயர் மட்டம்),
இலங்கைப் புகையிரத சேவைகள்.

பெறுகை இல.: SRS/F.7939.

12-167

---

# பொருட்கள் விற்பனவும் பிறவும்

**நீதிவான் நீதிமன்றம்- கல்முனை**

**பறிமுதல் செய்யப்பட்ட பொருட்களை பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்தல்**

கல்முனை நீதிவான் நீதிமன்ற வழக்குகளில் பறிமுதல் செய்யப்பட்ட கீழ்க் குறிப்பிடப்படும் பொருட்கள் எதிர்வரும் 2023.12.23 ஆந் திகதி காலை 9.00 மணிக்கு இந்நீதிமன்ற வளாகத்தில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

1. இப் பொருட்களுக்காக உரிமை கோருபவர்கள் எவருமிருப்பின் அன்றைய தினம் ஏலவிற்பனை தொடங்குவதற்கு முன்னர் தங்களது உரிமைக் கோரிக்கையை முன்வைக்க வேண்டும்.

2. பொது மக்கள் நீதிமன்றப் பதிவாளரின் அனுமதியுடன் குறிப்பிட்ட பொருட்களை ஏல விற்பனை தொடங்குவதற்கு அரை மணித்தியாலத்திற்கு முன்னர் பார்வையிடலாம்.

3. இப் பொருட்களில் எவற்றையேனும் விலைகள் ஒவ்வாத பட்சத்தில் விற்பனையிலிருந்து மீளப்பெறுவதற்கு இந்நீதிமன்றுக்கு உரிமையுண்டு.

4. பொருட்களைக் கொள்வனவு செய்பவர்கள் உடனடியாக கொடுப்பனவைப் பணமாக மட்டும் செலுத்துவதுடன் உரிய பொருட்களை நீதிமன்ற வளாகத்திலிருந்து அப்புறப்படுத்தி விட வேண்டும்.

5. பொருட்களை விலை வைத்து வாங்குவோர் தமது ஆளடையாளத்தை உறுதிப்படுத்துவதற்கு தேசிய அடையாள அட்டையைக் கொண்டு வருதல் வேண்டும்.

எம்.எஸ். எம். சம்சுதீன்,
நீதிவான்.

நீதிவான் நீதிமன்றம்,
கல்முனை,
2023.12.23.

**கல்முனை நீதிவான் நீதிமன்றில் 2023.12.23 ஆந் திகதி பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படவுள்ள பொருட்களின் விபரம்**

| தொ இல. | வழக்கிலக்கம் | பொருள் விபரம் | எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1 | 97264/CC/21 | EP HH 6451 ஹொண்டா 50 மோட்டார் சைக்கிள் | 1 |
| 2 | AR/390/23 | EP BFM 3270 பஜாஜ் பல்சர் மோட்டார் சைக்கிள் | 1 |
| 3 | AR/96/23 | துவிச்சக்கர வண்டி | 1 |
| 4 | AR/188/23 | துவிச்சக்கர வண்டி | 1 |
| 5 | 2322/FDI/23 | மிதிப்புக் கட்டைகள் (மீன்பிடி வலைக்குரியது) | 172 |
| 6 | 2322/FDI/23 | ஈய வளையங்கள் ( மீன்பிடி வலைக்குரியது) | 17 |
| 7 | 2322/FDI/23 | நைலோன் கயிறு | bundle |
| 8 | 1963/CAA/23 | மொபைல் போன் சார்ஜர் | 1 |
| 9 | 1664/CAA/23 | மொபைல் போன் சார்ஜர் | 1 |
| 10 | 2417/CAA/23 | பெண்களுக்கான கைக்கடிகாரம் | 1 |
| 11 | 2412/CAA/23 | அட்லஸ் 40 பக்க அப்பியாசக் கொப்பிகள் | 3 |
| 12 | 1888/CAA/23 | பெட்ரிக் துணித்துண்டு | 1 |
| 13 | 2419/CAA/23 | எல் ஈ டி டோச் | 1 |
| 14 | 2414/CAA/23 | எல் ஈ டி டோச் | 1 |
| 15 | 522/CAA/23 | பெனசோனிக் பெட்டரி | 2 |
| 16 | AR/869/23 | இரும்பு பார் | 1 |
| 17 | 2702/PC/23 | பிளாஸ்ரிக் பாய் | 1 |
| 18 | 2336/PE/23 | பிளாஸ்ரிக் கலன் | 3 |
| 19 | 2336/PE/23 | பிளாஸ்ரிக் வாளி | 1 |
| 20 | 1254/PE/23 | பிளாஸ்ரிக் கலன் | 1 |
| 21 | 2940/CAA/23 | சீனி 500 கிராம் அடங்கிய பொதி | 1 |
| 22 | 2597/CAA/23 | பாசுமதி அரிசி ஒரு கிலோகிராம் அடங்கிய பொதி | 1 |
| 23 | 2848/CAA/23 | புரோக்கன் அரிசி ஒரு கிலோகிராம் அடங்கிய பொதி | 1 |
| 24 | 2713/CAA/23 | நாட்டரிசி ஒரு கிலோகிராம் அடங்கிய பொதி | 1 |
| 25 | 2847/CAA/23 | கீரி சம்பா அரிசி ஒரு கிலோகிராம் அடங்கிய பொதி | 1 |
| 26 | 2853/CAA/23 | கீரி சம்பா அரிசி 10 கிலோகிராம் அடங்கிய பொதி | 3 |
| 27 | 2712/CAA/23 | கீரி சம்பா அரிசி 5 கிலோகிராம் அடங்கிய பொதி | 2 |
| 28 | 2852/CAA/23 | கீரி சம்பா அரிசி 5 கிலோகிராம் அடங்கிய பொதி | 2 |
| 29 | | வெற்றுக் கண்ணாடி போத்தல்கள் | heap |
| 30 | | வெற்று பியர் டின்கள் | heap |
| 31 | | புறத்தொதுக்கிய தராசின் இரும்புப் பாகங்கள் | heap |

12-197